**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.

**2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03–ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.05/2024 in O.S.188/2019**

காசிநாதன், ... மனுதாரர்/வாதி

/எதிர்/

வெங்கடேசன், ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இறுதியாக 07.11.2024 அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.உத்திராபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்கமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக மனுவில் அடியிற்கண்டவாறு தாவாவவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு சி.பி.சி ஆர்டர் 6 ரூல் 17 & 18ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் பிரமான வாக்குமூலத்தின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாவா தாக்கல் செய்துள்ள காலத்தில் வழக்குரையில் மனுதாரின் தந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 07.06.1970ம் ஆண்டு கிரையம் பெற்று அதன் ஆவணம் எண் 1023/1970 என கூறியதாகவும், ஆனால் கிரயம் பெற்ற தேதி சரியாகவும், வருடம் மட்டும் 07.06.1970 பதிலாக 07.06.1977 என கணினி பிழை ஏற்பட்டுவிட்டதாகவும், உண்மையில் மனுதாரரின் தந்தை கிரயம் வாங்கிய வருடம் 07.06.1970 என்றும், அதே போல் மனுதாரரின் வழக்குரை வியாஜ்ஜியமூலத்திலும் கிரயம் வாங்கிய தேதி 07.06.1970 பதிலாக 07.06.1977 தவறுதலாக பதிவாகிவிட்டது என்றும், வழக்குரை சொத்தின் சொத்து விபரத்தில் 2வது அயிட்டத்தில் ராமச்சந்திரன் பாகமான சர்வே எண்.93/7A என்பதற்கு பதிலாக சர்வே எண்.93/7B என கணினி பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், மனுதாரருக்கு பாத்தியமான சொத்து தான் 93/7B என்றும், ராமச்சந்திரனுக்கு பாகமான

சொத்து சர்வே எண்.93/7A என்றும், மேலும் வழக்குரையின் ஆவணங்கள் விவரத்தில் வரிசை எண்.1ல் 1வதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய பத்திரத்தின் உண்மையான தேதி 07.06.1970 என்பதற்கு பதிலாக 20.06.1977 என தவறுதலாக கணினி பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், மனுதாரின் தந்தை அருணாசலம் கிரயம் வாங்கிய பத்திரம் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதில் அருணாசலம் கிரையம் வாங்கிய தேதி 07.06.1970 என தெளிவாக உள்ளது என்றும், ஆனால் பிராது தயாரித்து தாக்கல் செய்த காலத்தில் மேற்படி விவரங்கள் தவறுதலாக கணினி பிழை எற்பட்டுவிட்டது என்றும், மேற்படி பிரதிவாதி தனது எதிர்வழக்குரியல் மனுதாரர் வழக்குரையில் கூறிய தேதியை குறிப்பிட்டு எதிர்வழக்குரையை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை மனுதாரர் தற்போது முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்ய பார்த்தபோது தான் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேலும் சொத்து விபரம் பொறுத்து கவனித்த போது தான் சொத்து விபரத்திலும் மனுதாரர் சர்வே எண்ணையே ராமச்சந்திரன் சர்வே எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் தெரியவந்தது என்றும், வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ தவறுதலாக தாக்கல் செய்யவில்லை என்றும், தெய்வாதீனமாக நடந்த ஒன்று என்றும், மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், மேற்படி தவறு கணினி பிழையால் ஏற்பட்ட ஒன்று என்றும், மனுதாரர் வயோதிகத்தின் காரணமாக அதை சரியாக கவனிக்காமல் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றும், தவறான சங்கதிகள் எதுவும் குறிப்பிட்டு மனுதாரர் பிராதை திருத்த மனு தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி பிராதை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்யவில்லை எனில் சமூகம் நீதிமன்றம் பின்னிட்டு தீர்வு வழங்க ஏதுவாக அமையாது என்றும், அதனால் வழக்கின் சாரம்சமும் தீர்ப்பிற்கு பின்னிட்டு ஏற்படகூடிய சட்ட சிக்கலும், மேற்படி தீர்ப்பை செயல்முறைபடுத்த முடியாமலும் போய்விடும் என்றும், மேற்படி மனுவை திருத்துவதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், எனவே மனுவில் கண்டவாறு தாவாவவை திருத்தம் செய்ய உத்தரவாக வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.<u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரரின் மனு சரியல்ல உண்மைக்கு புறம்பானது சுத்த பொய்யுடையது என்றும், வாதியின் தந்தை கிரையம் வாங்கிய அசல் கிரைய பத்திரத்தில் கிரைய தேதி 07.06.1977 என்று தான் உள்ளது என்றும், அதன்படி தான் மனுதாரர் அவரது வழக்கில் 07.06.1977 என்று போட்டு கொடுத்துள்ளார் என்றும், இந்த பிழையை திருத்தம் செய்ய

முடியாது ஏனென்றால் கிரைய பத்திரத்திலேயே 07.06.1977 என்று தான் உள்ளது என்றும், அதனால் கிரைய பத்திரத்தை திருத்தினாலொழிய பிராதினை திருத்த இயலாது என்றும், மேற்படி சர்வே எண்.93/7Bக்கு நான்கெல்லை விவரம் சொல்லியுள்ளார் என்றும், நான்கெல்லையை திருத்தாமல் அதனை திருத்த இயலாது என்றும், ஆனால் அவர் செய்து கொண்ட பரிவர்த்தனை பத்திரத்தில் 1வது பார்ட்டியான காசிநாதன் ராமசுந்தரம் இவர் நிலத்திற்கு மேற்கு, வடக்கு, சாமிநாதன் நிலத்திற்கு தெற்கு, கந்தசாமி நிலத்திற்கு கிழக்கு என்று தான் உள்ளது என்றும், அதனால் நான்கெல்லையை திருத்தாமல் சர்வே எண்ணை மட்டும் திருத்துவதில் பயனில்லை என்றும், அதனால் மனுதாரர் சொல்லும் திருத்தத்தினால் உண்மை நிலையை பூஸ்திதியில் காட்டாது என்றும், எனவே இந்த மனு வேண்டுமென்றே வழக்கு காலத்தை நீட்டி எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்படவில்லை. இருதரப்பிலும் சாட்சியம் கொடுக்கப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>**5. பிரச்சணைக்குரிய தீர்வு.**</u>

மனுதாரர் தரப்பு மனுவில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மனுதாரரின் வழக்குரையில் மனுதாரரின் தந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 07.06.1970ம் ஆண்டு கிரயம் பெற்று அதன் ஆவணம் எண் 1023/1970 என கூறியதாகவும், ஆனால் கிரயம் பெற்ற தேதி சரியாகவும், வருடம் மட்டும் 07.06.1970 பதிலாக 07.06.1977 என கணினி பிழை ஏற்பட்டுவிட்டதாகவும், அதேபோல் மனுதாரரின் வழக்குரையில் வியாஜ்ஜியமூலத்திலும் கிரயம் வாங்கிய தேதி 07.06.1970 பதிலாக 07.06.1977 தவறுதலாக பதிவாகிவிட்டது என்றும், அதேபோல் வழக்குரையில் சொத்து விபரத்தில் 2வது அயிட்டத்தில் ராமச்சந்திரன் பாகமான சர்வே எண்.93/7A என்பதற்கு பதிலாக சர்வே எண்.93/7B என கணினி பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், மனுதாரருக்கு பாத்தியமான சொத்து தான் 93/7B என்றும், ராமச்சந்திரனுக்கு பாகமான சொத்து சர்வே

எண்.93/7A என்றும், மேலும் வழக்குரையின் ஆவணங்கள் விவரத்தில் வரிசை எண் 1ல் 1வதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய பத்திரத்தின் உண்மையான தேதி 07.06.1970 என்பதற்கு பதிலாக 20.06.1977 என தவறுதலாக கணினி பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் மனுதாரர் வழக்குரையில் கூறிய தேதியை குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை தற்போது முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்ய பார்த்தபோது தான் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேலும், சொத்து விபரம் பொறுத்து கவனித்த போது தான் சொத்து விபரத்திலும், சர்வே எண்ணையே ராமச்சந்திரன் சர்வே எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் தெரிய வந்தது என்றும், இது வேண்டுமென்றோ, அலட்சியமாகவே தவறுதலாக தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளது என்றும், ஆதலால் மனுவில் கண்டவாறு தாவாவை திருத்தம் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மேற்படி மனுதாரரின் மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் வாதியின் தந்தை கிரையம் வாங்கிய அசல் கிரைய பத்திரத்தில் கிரைய தேதி 07.06.1977 என்று தான் உள்ளது என்றும், அதன்படி தான் மனுதாரர் வழக்கில் 07.06.1977 என்று போட்டு கொடுத்துள்ளார் என்றும், இந்த பிழையை திருத்தம் செய்ய முடியாது என்றும், ஏனென்றால் கிரைய பத்திரத்திலேயே 07.06.1977 என்று தான் உள்ளது என்றும், அதனால் கிரைய பத்திரத்தை திருத்தினாலொழிய பிராதினை திருத்த இயலாது என்றும், அதேபோன்று 2வது அயிட்டத்தில் சர்வே எண் 93/7A என்பதற்கு பதிலாக சர்வே எண்.93/7B என்று கணினி பிழை ஏற்பட்டுவிட்டது என்று மனுதாரர் கூறுவது சரியல்ல என்றும், ஏனென்றால் சர்வே எண்.93/7B-க்கு நான்கெல்லை விவரம் சொல்லியுள்ளபோது நான்கெல்லையை திருத்தாமல் அதனை திருத்த இயலாது என்றும், ஆனால் அவர் செய்து கொண்ட பரிவர்த்தனை பத்திரத்தில் 1வது பார்ட்டியான காசிநாதன் ராமசுந்தரம் நிலத்திற்கு மேற்கு, வடக்கு, சாமிநாதன் நிலத்திற்கு தெற்கு, கந்தசாமி நிலத்திற்கு கிழக்கு என்று தான் உள்ளது என்றும், அதனால் நான்கெல்லையை திருத்தாமல் சர்வே எண்ணை மட்டும் திருத்துவதில் பயனில்லை என்றும் ஆதாலால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. மேற்படி இருதரப்பு சங்கதிகளையும் பரிசீலனை செய்து பார்க்கையில் மனுதாரர்

தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் வழக்குரையில் மனுதாரரின் தந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 07.06.1970ம் ஆண்டு கிரையம் பெற்று அதன் ஆவணம் எண் 1023/1970 என கூயதாகவும், ஆனால் கிரயம் பெற்ற தேதி சரியாகவும், வருடம் மட்டும் 07.06.1970 பதிலாக 07.06.1977 என கணினி பிழை ஏற்பட்டுவிட்டதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளதை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை சங்கதியில் வாதியின் தந்தை கிரையம் வாங்கிய அசல் கிரைய பத்திரத்தில் கிரைய தேதி 07.06.1977 என்று தான் உள்ளது என்றும், அதன்படி தான் மனுதாரர் வழக்கில் 07.06.1977 என்று போட்டு கொடுத்துள்ளார் என்றும், இந்த பிழையை திருத்தம் செய்ய முடியாது என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரரின் மறுப்புரை சங்கதியை நிரூபிக்கும் விதமாக மனுதாரர் மேற்படி கிரய பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு உள்ளபோது மனுதாரரின் மனு சங்கதியை நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும், மனுதாரர் மனுவில் வழக்குரை சொத்தின் சொத்து விபரத்தில் 2வது அயிட்டத்தில் ராமசந்திரன் பாகமான சர்வே எண்.93/7A என்பதற்கு பதிலாக சர்வே எண்.93/7B என கணினி பிழை ஏற்பட்டுவிட்டதாக கூறியுள்ளார். மேற்படி அதனை பொறுத்து திருத்தங்கள் மேற்கொள்ள இயலாது. ஏன்னென்றால் ஒரு சர்வே எண்ணில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றால் அதன் நான்கெல்லையும் திருத்தம் செய்யவேண்டும். ஆனால் மனுதாரர் சர்வே எண்ணை மட்டும் திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறுவதால் மனுதாரரின் மனு ஏற்கத்தக்க கூடியதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும், ஒரு வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் முன்பு அதன் முழுவிவரத்தையும் மனுதாரர் தெரிந்து தாக்கல் செய்திருக்கவேண்டும். அல்லது வழக்கு தாக்கல் செய்த உடனேவது மேற்படி குறைகளை கண்டு பிடித்து இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எல்லாம் செய்யாமல் தற்போது அசல் வழக்கானது மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்ட எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக உள்ள தருவாயில் இவ்வாறு மனுதாரர் அசல் வழக்குரையில் வழக்குமூலத்திலும், சொத்துவிவரத்திலும் மேற்படி திருத்தம் செய்ய கோருவது ஏற்புடையதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03-ம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.12.03 17:09:13 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ.)
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.12.03 17:09:21
+0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ.)
ஜெயங்கொண்டம்.